# பிரித்தம் சிங்: பல்கலைக்கழகப் பருவம் எனக்கு திருப்புமுனையாக அமைந்தது

நாட்டின் கல்வி முறையில் உள்ள ஒவ்வொரு தடைக்கல்லையும் கடக்க தாம் சிரமப்பட்டதாலும் தேசிய சேவையும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழத்தில் (என்யுஎஸ்) தாம் மேற்கொண்ட பட்டக் கல்வியும் தமக்கு திருப்புமுனையாக அமைந்ததாக பாட்டாளிக் கட்சித் தலைமைச் செயலாளர் பிரித்தம் சிங் கூறியுள்ளார்.

என்யுஎஸில் கலைகள், சமூக அறிவியல் துறையிலிருந்து பட்டம் பெறும் 470 மாணவர்களிடம் சிறப்புரையாற்றிய அவர், தமது கல்விப் பயணத்தைப் பற்றி பகிர்ந்துகொண்டார்.

தேசிய சேவையும் பல்கலைக் கழகப் பருவமும் கல்விமீது தமது மனநிலையை மாற்றியதாக திரு சிங் கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.